**இலங்கை கரப்பந்தாட்ட் சம்மேளனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியள்ள அபிப்பிராயம்**

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, திரண்ட நிதியங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரககாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து , சம்மேளனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூபா 563,212 ஆனது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக காட்டப்பட்டிருந்தது. | கணக்கு தயாரிக்கும் நேரத்தில் பட்டியல்கள் பெறப்படாததால் கணக்குகளை தயாரிப்பதற்கு முடியவில்லை. | நிதிக்கூற்றுக்கள் முறையாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பீச் வொலிபோல் சாம்பியன்ஷிப்பிற்கான தங்குமிட வசதிகளை வழங்கியமைக்கான தள்ளுபடி ரூபா 553,080 ஆனது நிதிக்கூற்றுக்களில் வருமானமாக காட்டப்படவில்லை. | தள்ளுபடியாகப் பெறப்பட்ட செலுத்த வேண்டிய தொகை கணக்கிடப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | 6 மாதங்களுக்கும் மேற்பட்ட ரூபா 75,000 பெறுமதியான காசோலைகளுக்கான சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் இடம் பெறவில்லை | இவ்விடயத்தினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகார சபை மற்றும் இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய மீதிகளுக்கிடையிலான வேறுபாடு ரூபா 1,021,449 ஆனது சம்மேளனத்தினால் இணக்கம் செய்யப்படவில்லை. | இவ்விடயத்தினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இணங்காத வேறுபாட்டை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 839,164 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,862,514 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,023,350 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு வருமானம் ரூபா 4,917,596 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சம்மேளனம் தொடர்ந்து பல ஆண்டுகளாக நிகர நட்டத்தை சந்தித்து வருகின்றது. மேலும், திரண்ட நிதியங்கள் 04 ஆண்டுகளாக தொடர்ந்து எதிர்மறை மீதிகளை கொண்டிருந்தன. மீளாய்வாண்டில் திரண்ட நிதியம் ரூபா 5,057,191 எதிர்மறை மீதியைக் கொண்டிருந்தது. மேலும், சம்மேளனத்தின் நடைமுறை விகிதம் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் மீளாய்வாண்டில் 1 நடைமுறை சொத்துகளுக்கான நடைமுறை பொறுப்புகள் 78.8 ஆக இருந்தமை திரவத் தன்மையை மோசமாக பாதித்திருந்தது. விரைவுத் தன்மை மற்றும் நிதிக் கட்டுப்பாடு ஆகியவற்றின் மீது சபை உறுப்பினர்களால் போதுமான அளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை வொலிபோல் சம்மேளனத்தின் திரவத் தன்மை தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு நிறைவேற்று சபை செயற்பட்டுள்ளது. | சம்மேளனத்தின் நிதிச் செயற்பாடு மற்றும் திரவத் தன்மை குறித்து சபையின் முகாமைத்துவத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சம்மேளனத்தின் விவகாரங்கள் தொடர்பாக உள்ளக | உள்ளக கணக்காய்வு செயற்படுத்தப்படாத போதிலும் , ஒவ்வொரு | சம்மேளனத்தினால் உள்ளக கட்டுப்பாட்டிற்கு நிதி |

| | | |
|---|---|---|
| கணக்காய்வொன்றை நடாத்துவது குறித்து உறுப்பினர்கள் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மாதமும் செயற்குழு கூட்டத்தில் செலவுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. | கணக்காய்வு செயற்படுத்தப்பட வேண்டும். |

**4. செலுத்த வேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| - இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனம் மற்றும் சுகததாச உள்ளக அரங்கம் ஆகியவற்றிற்கு 5 வருடங்களுக்கும் மேற்பட்ட செலுத்த வேண்டிய தொகையான ரூபா 3,214,856 சம்மேளனத்தினால் தீர்க்கப்படவில்லை. | அடுத்த ஆண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தொகை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். |

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்பட்ட உறுப்பினர் கட்டணம், உறுப்பினர்கள் சம்மேளனத்தை விட்டு வெளியேறிய திகதி மற்றும் உறுப்புரிமைத் திகதி ஆகியவற்றைச் சேர்த்து உறுப்பினர் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல் வழங்கப்பட்டது. | உறுப்பினர் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5.2 ஒருங்கிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கத்தின் 7(xi) ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் ஆளுநர் சபையால் சம்மேளனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | தேசிய விளையாட்டு சங்கத்தின் கட்டளைகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**5.3 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 08 வரை ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய அணியிலிருந்து நாடு திரும்பாத இரண்டு வீரர்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விசேட புலனாய்வு பிரிவிற்கு புகார் அளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த வீரர்கள் குறித்த சோதனைக்கு சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது. | திரும்பாத வீரர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |